பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண்: 30** **நாள் : 05.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறாக சாலை மற்றும் நடை பாதைகளில் உள்ள கட்டுமான பொருட்களை உடனடியாக அகற்ற வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்த துறைகள் சார்ந்த ஆய்வுக்கூட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.02.2019) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை, பேருந்து சாலைகள், பாலங்கள், மின்துறை, திடகழிவு மேலாண்மை, இயந்திர பொறியியல் துறை, சுகாதார மற்றும் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தினந்தோறும் சராசரியாக 2,089 புதிய கட்டுமான பணிகள் மற்றும் 500 சிறு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பகுதிகளில் கட்டட உரிமையாளர்களால் சாலைகள் மற்றும் நடைபாதைகளை ஆக்கிரமைத்து கட்டுமான பொருட்களும் கட்டட கழிவுகளும் உரிமையாளர்களால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கொட்டப்படுகிறது. இது சட்டப்படி தவறான செயலாகும். கட்டுமான பொருட்களும் கட்டட கழிவுகளும் பொது மக்களுக்கு இடையூறின்றி கட்டட வளாகத்திற்குள் இருக்கும்படியும் இதை பின்பற்றாதவர்களின் கட்டுமான பொருட்களை பறிமுதல் செய்யவும் மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றை கவனிக்காமல் இருக்கும் மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என முதன்மைச் செயலாளர் அவர்கள் கடுமையாக எச்சரித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 2,77,662 தெரு மின் விளக்குகளில் 97 சதவிகிதம் அதாவது 2,72,108 விளக்குகள் எல்.இ.டி மின்விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 5,554 மின்விளக்குகளும் எல்.இ.டி மின்விளக்குகளாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக மாநகராட்சியின் மின் கட்டணம் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ. 2.53 கோடி அளவிற்கு குறைந்துள்ளது. இந்த மின்விளக்கு கம்பங்களில் உள்ள விளம்பர பலகைகள் மற்றும் தேவையற்ற கேபிள்களை உடனடியாக அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

நகரின் பிரதான பேருந்து சாலைகள், உட்புற சாலைகள் உட்பட அனைத்து சாலைகளிலும் உள்ள குப்பை தொட்டியில் உள்ள குப்பைகளை காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் குப்பை தொட்டிகளில் குப்பைகள் நிரம்பி வழியாமல் இருக்கும் வகையில் உடனுக்குடன் முழுமையாக அகற்றிடவும், குறிப்பாக குடிசைப் பகுதிகள், மார்க்கெட் பகுதிகள், வணிக வளாகங்கள் அமைந்துள்ள பகுதிகள், மருத்துவமனை வளாகங்கள் மற்றும் பள்ளி வளாக பகுதிகள் ஆகிய இடங்களில் தீவிர துப்புரவு பணி மேற்கொண்டு குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்பட வேண்டும் எனவும் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களை விரைந்து முடித்திட வேண்டும் எனவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங் இ.ஆ.ப., அவர்கள் மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப, அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**